**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No.178/2022**

**2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை**

**வா.சா.2 (செல்லம்)**

**கு.வி:**

நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் சுமார் 10 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் வைத்து தான் புரோநோட்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். மகாதேவி எப்படி தெரியும் என்றால் மகாதேவியின் வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன். கடன் எவ்வளவு ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார் என்றால் ரூ.500 நோட்டுகள் கொடுத்தார். மேற்படி வீட்டில் வைத்து தான் பிரதிவாதி கையெழுத்து செய்தாரா என்றால் பிரதிவாதி பணம் கேட்டு தராமல் பஞ்சாயத்து செய்து தான் மேற்படி புரோநோட்டில் கையெழுத்து செய்தார். பஞ்சாயத்து செய்து புரோநோட்டில் கையெழுத்து வாங்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் மகாதேவி வீட்டில் மாடியில் குடியிருக்கும் ஒருவரும், நான், மகாதேவி மற்றும் மகாதேவியின் கணவர் ஆகியோர்கள் இருந்தோம். வேறு யார் புரோநோட்டில் கையெழுத்து செய்தார் என்றால் நான் மட்டும் சாட்சி கையெழுத்து போட்டேன். யார் யார் பஞ்சாயத்து செய்தார்கள் என்றால் மகாதேவி மற்றும் மகாதேவியின் கணவர். மகாதேவி வீட்டில் குடியிருந்து வருவதால் மகாதேவி தயார் செய்த புரோநோட்டில் சாட்சி கையெழுத்து செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

சார்பு நீதிபதி
மானாமதுரை